# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 40/பேரூ/2024**
**நாள் : 29.10.2024**

திரு. A.P. சுகுமார்,
சின்னாளபட்டி , திண்டுக்கல் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
சின்னாளபட்டி பேரூராட்சி, திண்டுக்கல் மாவட்டம். – எதிர்மனுதாரர்

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம், சின்னாளபட்டி, மேட்டுப்பட்டி, கே.என்.பி.ஏ.தெரு, எண்.66–ஏ என்ற முகவரியை சேர்ந்த திரு. A.P. சுகுமார் என்பவரது நாளிடப்படாத மனு இம்முறைமன்ற நடுவத்தில் 03.06.2024 அன்று பெறப்பட்டு, 40/பேரூ/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம், சின்னாளபட்டி, மேட்டுப்பட்டி, கே.என்.பி.ஏ.தெரு, எண்.66–ஏ என்ற முகவரியை சேர்ந்த திரு. A.P. சுகுமார் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார் :-

"திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம், சின்னாளபட்டி பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் பத்திரப்பதிவு ஆவண எண்.2568/1923–ன் படி அம்பாத்துரை வருவாய் கிராமத்தில் உள்ள சொத்து விபரம், சர்வே எண்.7/3 நிரில்–ஏ1 செ.34 மற்றும் மற்றும் 8/1–நிரில்–ஏ1. செ.61ம் கட்டுப்பட்டது. இவ்விடத்தினை 1994 ஆம் வருடம் மனையடிகளாக பிரித்து குடியிருப்பு வீடுகள் கட்டி குடியிருந்து வருகின்றனர். மனையடிகளாக பிரிக்கப்பட்டதில் பொது உபயோகத்திற்காக சின்னாளபட்டி பேரூராட்சிக்கு சின்னாளப்பட்டி சார்பதிவக ஆவண எண்.695/94–ன் படி சாலைகள் ஒப்படைக்கப்பட்டது போக மீதமுள்ள இடத்தினை 24 மனை தெலுங்கு செட்டியார் உறவின்முறை S.K.S. லாரி செட் உரிமையாளர்கள் அபகரித்து கடந்த 2020–ஆம் ஆண்டில் கடைகள் கட்டடம் கட்டும்பொழுது சின்னாளபட்டி பேரூராட்சி அலுவலகத்தில் ஆட்சேபனை மனு, செயல் அலுவலரிடம் வழங்கப்பட்டது. அம்மனுவிற்கு, பேரூராட்சி நிர்வாகத்திடமிருந்து கட்டட அனுமதி பெற்றப்பின்னரே கட்டட பணி மேற்கொள்ள வேண்டுமென தெரிவித்து S.K.S. லாரி செட் உரிமையாளர்கள் மற்றும் சாஸ்தா கோவில் நிர்வாகிகளுக்கு அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 2020–2021 கொரோனா காலகட்டம் என்பதால் என்னுடைய வயது முதிர்வின் (75 வயது)

காரணமாக என்னால் இடத்தினை பாதுகாப்பு செய்ய இயலவில்லை. இதுகுறித்து பேரூராட்சி அலுவலகத்தில் நேரடியாக சென்று அலுவலர்களிடம் பலமுறை முறையிட்டுள்ளேன். இந்நிலையில், கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு புதிய மின் இணைப்பு பெறப்பட்டுள்ளது. மின்வாரிய அலுவலகத்தில் புகார் அளித்ததில் சின்னாளபட்டி பேரூராட்சியின் உரிய சொத்துவரி இரசீது பெறப்பட்டும், **சொத்து குறித்து நீதிமன்ற வழக்கு நிலுவையில் உள்ளதால்,** அரசு வழக்கறிஞரிடம் சட்ட ஆலோசனை பெற்ற பின்பு இரண்டு வணிக மின் இணைப்பு பெறப்பட்டுள்ள விவரம் தெரியவந்தது. RTI மூலம் கேட்கப்பட்டதில் கட்டடங்களுக்கு புதிய வரி விதிப்பு ஏதும் செய்யப்படவில்லை என்றும், கட்டட அனுமதி பெறவில்லை என்றும் பேரூராட்சி அலுவலகத்தினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. கட்டடம் கட்டுவதற்கு ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டதற்கு பேரூராட்சி நிர்வாகத்தினால் மேற்கண்ட சர்வே எண்களிலுள்ள நிலத்தினை அளந்து அத்துமால் செய்து, பட்டா நகல், வில்லங்க சான்று ஆவணங்கள் சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டதால், என்னிடம் இருந்த ஆவண நகல்கள் **(1923–ம் ஆண்டிலிருந்து)** சின்னாளபட்டி பேரூராட்சி அலுவலகத்தில் **25.08.2023–**ஆம் தேதியன்று சமர்ப்பிக்கப்பட்டது. என்னுடைய இடத்தினை ஆக்கிரமிப்பு செய்த ஆக்கிரமிப்புதாரர்கள் எந்த ஆவணமும் சமர்ப்பிக்கப்பட்டதாக தெரியவில்லை. இது தொடர்பாக தலைமை எழுத்தர் திரு. கலியமூர்த்தி என்பவரிடம் கேட்டால் எல்லாம் எனக்கு தெரியும் என்று தெரிவிக்கிறார்.

மேற்கண்ட இடத்தில் குடியிருப்பு மனைகள் பிரித்தது போக, பொது இடங்கள் மற்றும் ஆக்கிரமிப்பு செய்த இடங்களை மீட்டுத்தர வேண்டி சின்னாளபட்டி பேரூராட்சி அலுவலகத்தில் நேரடியாகவும், பலமுறை மனுகொடுத்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாததால் திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவரிடம் மனு கொடுக்கப்பட்டது. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சின்னாளபட்டி பேரூராட்சி நிர்வாகத்திடம் நடவடிக்கை எடுக்க தெரிவிக்கப்பட்டும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேலும், பேரூராட்சி அலுவலகத்தில் தலைமை எழுத்தர் திரு. கலியமூர்த்தி, பிரிவு எழுத்தர் திரு. பிச்சை, திரு. கருப்பையா மற்றும் செயல் அலுவலர்கள், திருமதி. கலையரசி, திருமதி. பிரகந்தநாயகி, திரு. நந்தகுமார், திரு. செல்வராஜ் மற்றும் திரு. சிவகுமார் ஆகியோர்கள் செய்து தருவதாக கூறி அலைக்கழித்து வருகின்றனர்.

மேலும், தலைமை எழுத்தர், பிரிவு எழுத்தர் ஆகியோர் செயல் அலுவலரிடம் தெரிவித்து செய்து தருகின்றோம் என்று கூறிவிட்டு, ஆக்கிரமிப்புதாரர்களிடம், கையூட்டு பெற்றுக்கொண்டு வயதான என்னைஅலைக்கழித்து வருகின்றனர். பேரூராட்சிக்கு சொந்தமான, சாலையின் அருகில் உள்ள இடத்தினை ஆக்கிரமிப்புதாரர்கள் பயன்படுத்தும் வகையில், வண்ணங்கள் பதித்து அவர்களது பயன்பாட்டிற்கு வழங்கியுள்ளார்கள். என் வயது முதிர்வினை கருதி மேற்கண்ட இடம் தொடர்பான ஆவணங்களை பார்வையிட்டு எனக்குரிய உரிமையினை மீட்டுத்தருமாறு பணிவன்புடன் வேண்டிக் கேட்டு கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 30.08.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் திண்டுக்கல் மாவட்டம், சின்னாளபட்டி பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3) திண்டுக்கல் மாவட்டம், சின்னாளபட்டி பேரூராட்சியின் செயல் அலுவலர் தனது 09.10.2024 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:-

"மனுதாரரின் 21.11.2020 நாளிட்ட மனுவில் திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம், சின்னாளபட்டி பேரூராட்சி, சின்னாளபட்டி, மேட்டுப்பட்டி சாத்தாவுராயர் சுவாமி கோவிலுக்கு தென்புறம் காமராஜர் சாலையில் அம்பாத்துரை கிராமபுலத்தில் பட்டா எண்.2816–க்கு கட்டுப்பட்ட சர்வே 8/1B நிர் உடைய மனையிடம் மனுதாரரின் தகப்பனார் அமரர் அ. பருவதம் செட்டியார் வழியில் மனுதாரருக்கு சொந்தமானது என்றும், மேற்படி இடத்தில் எவ்வித ஆவணமின்றி கட்டடம் கட்டிவருகின்றனர் என்றும், கட்டடம் கட்டுவதற்கு அனுமதி மறுப்பு தெரிவிக்கவும், கட்டடம் கட்டுவதை நிறுத்தி வைக்கவும் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு அறிவுறுத்த கேட்டுக்கொள்ளப்பட்டது. 21.12.2020 நாளிட்ட சின்னாளபட்டி பேரூராட்சியின் குறிப்பாணையில் மேற்கண்ட இடத்தினை தல ஆய்வு பணி மேற்கொண்டு மூன்று தினங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்க, துப்புரவு ஆய்வாளர், வரித்தண்டலர்கள், மற்றும் துப்புரவு பணி மேற்பார்வையாளர் ஆகியோரை அறிவுறுத்தப்பட்டது. அதன்படி, துப்புரவு ஆய்வாளர், வரித்தண்டலர்கள், மற்றும் துப்புரவு பணி மேற்பார்வையாளர் நேரில் சென்று தல ஆய்வு பணி மேற்கொண்டு S.K.S. லாரி உரிமையாளர்கள் மற்றும் சாஸ்தா கோவில் நிர்வாகிகள் கட்டடம் கட்டுவதை நிறுத்துமாறும், அவ்விடத்திற்கான ஆவணங்களை சமர்ப்பித்து உரிய கட்டட அனுமதி பெற்று கட்டுமானம் செய்ய வேண்டுமெனவும் , அதுவரை எவ்வித கட்டுமான பணிகள் மேற்கொள்ள வேண்டாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என அறிக்கை சமர்ப்பித்துள்ளார்கள்.

09.12.2020 நாளிட்ட சின்னாளபட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் அறிவிப்பு கடிதத்தில் மேற்கண்ட இடத்திற்கான ஆவணங்கள் அனைத்தும் சமர்ப்பித்து பேரூராட்சியில் கட்டட அனுமதி பெற்ற பின்னரே கட்டடப் பணிகள் மேற்கொள்ளவேண்டுமென்று S.K.S. லாரி உரிமையாளர்கள் மற்றும் சாஸ்தா கோவில் நிர்வாகஸ்தர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

12.02.2021 நாளிட்ட மனுவில் சாத்தாவுராயர் திருக்கோவில் அதன் தலைவர் மற்றும் வகையறா வாதிகளாகவும், திரு. A.P.சுகுமார் –1, திரு. A. கணேசன்–2, பிரதி வாதிகளாக காட்டி அசல் வழக்கு ஆத்தூர் முன்சிப் கோர்ட்டில் வழக்கு எண். O.S.6/2021 –ல் கட்டடம் கட்டுவதை சின்னாளபட்டி பேரூராட்சி தடைசெய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், வழக்கு முடியும் வரை தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரி வழக்கு தொடரப்பட்டது. வழக்கில் வாதிகளுக்கு சாதகமாக எந்தவிதமான நீதிமன்ற ஆணையும் பிறப்பிக்கப்படவில்லை. அதனையும் மீறி கட்டடம் கட்ட முயற்சி செய்து வருகின்றார்கள் என தெரிவித்து, கட்டடம் கட்டுவதற்கு தடை செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

ஆத்தூர் முன்சிப் கோர்ட்டில் வழக்கு எண். O.S.6/2021 –ல் தொடரப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளதால், வழக்கு முடிந்த பின்னர் கட்டட அனுமதி பெற்ற பின்னரே கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று 01.03.2021 நாளிட்ட சின்னாளபட்டி பேரூராட்சியின் செயல் அலுவலரின் அறிவிப்பு–2 கடிதத்தில் S.K.S. லாரி உரிமையாளர்கள் மற்றும் சாஸ்தா கோவில் நிர்வாகஸ்தர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

இந்நேர்வு தொடர்பாக, தொடர்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில் அம்பாத்துரை கிராமம் பட்டா எண்.2816–க்கு சர்வே 8 மற்றும் 8/1B இடத்தினை ஆத்தூர் வட்டாட்சியர் மூலம் இடத்தினை அளவீடு செய்து அத்துமால் பெற்ற பின்னரே, சொத்துவரி ஏற்படுத்தித் தர மனுதாரால் மனு செய்தால் மட்டுமே வழங்க இயலும் என மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது.

மேற்காணும் விவரப்படி, சின்னாளபட்டி பேரூராட்சியிலிருந்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதனையும், ஆத்தூர் வட்டம், அம்பாத்துரை கிராமம் பட்டா எண்.2816–க்கு சர்வே 8 மற்றும் 8/1B இடத்தில் S.K.S. லாரி உரிமையாளர்கள் மற்றும் சாஸ்தா கோவில் நிர்வாகஸ்தர்களுக்கு கட்டடம் கட்டுவதற்கு கட்டட அனுமதி ஏதும் வழங்கப்படவில்லை எனவும், அக்கட்டிடத்திற்காக சொத்துவரி இரசீதுகள் சின்னனாளபட்டி பேரூராட்சி அலுவலகத்திலிருந்து ஏதும் வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்துக் கொள்கிறேன். அச்சமயம் கொரோனா காலகட்டம் என்பதால் பணியாளர்கள் அனைவரும், நோய்தடுப்பு பணிகளையே முதன்மை பணியாக மேற்கொண்டு பணியாற்றினார்கள்.

மனுதாரர் மனுவில், பேரூராட்சிக்கு சொந்தமான சாலையின் அருகில் உள்ள இடத்தினை ஆக்கிரமிப்புதாரர்கள் பயன்படுத்தும் வகையில் வண்ணக்கல் பதித்து பயன்பாட்டிற்கு வழங்கியுள்ளார்கள் என தெரிவித்துள்ளார், பேரூராட்சிக்கு சொந்தமான பொதுப் பாதையில் பிற்பட்ட பகுதி மானிய நிதி திட்டம் (BRGF) 2013–2014 ஆம் ஆண்டு திட்டத்தில் ரூ.12.35 இலட்சம் மதிப்பீட்டில் வண்ணக்கல் பதித்து பணி முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.

மனுதாரரால், ஆத்தூர் வட்டம், அம்பாத்துரை கிராமம் பட்டா எண்.2816–க்கு சர்வே 8 மற்றும் 8/1B இடத்தினை வருவாய்த்துறை மூலம் அளவீடு செய்து அத்துமால் பெற்ற பின்னர், அவ்விடத்திற்குரிய பத்திரம், பட்டா நகல் இணைத்து வழங்கினால் மனுதாரரின் கட்டடத்திற்கு உரிய கட்டட அனுமதி வழங்கி, சொத்துவரி ஏற்படுத்தி தரப்படும் என தெரிவித்துள்ளார். மேலும், வழக்கு எண். O.S.6/2021, மாண்பமை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஆத்துாரில் தொடரப்பட்ட வழக்கானது 07.11.2023 அன்று தள்ளுபடி செய்யப்பட்டு, மீண்டும் இவ்வழக்கானது 30.11.2023–ஆம் தேதியன்று புதுப்பிக்கப்பட்டு (Restored) நாளது தேதிவரை வழக்கு நடைபெற்று வருகிறது" என தெரிவித்துள்ளார்.

4) மனுதாரரின் புகார் மனு மற்றும் சின்னாளபட்டி பேரூராட்சியின் செயல் அலுவலரின் விளக்க அறிக்கை ஆகியவை பரிசீலிக்கப்பட்டன.

சின்னாளபட்டி பேரூராட்சியின் செயல் அலுவலரின் விளக்க அறிக்கையில் சாத்தாவுராயர் திருக்கோவில் அதன் தலைவர் மற்றும் வகையறா வாதிகளாகவும், திரு. A.P.சுகுமார் –1, திரு. A. கணேசன்–2, பிரதி வாதிகளாக காட்டி கட்டடம் கட்டுவதை சின்னாளபட்டி பேரூராட்சி தடைசெய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், வழக்கு முடியும் வரை தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரி ஆத்துார் முன்சிப் கோர்ட்டில் தொடரப்பட்ட அசல் வழக்கு எண். O.S.6/2021, மாண்பமை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தால் 07.11.2023–ம் தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்டு, மீண்டும் மாண்பமை நீதிமன்றத்தால் 30.11.2023–ஆம் தேதியன்று புதுப்பிக்கப்பட்டு (Restored) நாளது தேதிவரை வழக்கு நடைபெற்று வருகிறது என்பதை சின்னாளபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் சமர்ப்பித்துள்ள ஆவணங்களின் மூலம் அறிய வருகிறது. இந்நிலையில் வழக்கானது மாண்பமை நீதிமன்றத்தின் முன் நிலுவையில் உள்ளது என தெரியவருகிறது.

மேற்காணும் சூழ்நிலையில், 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10(3) (b) ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரித்தலாகாது என்பதால், இப்பொருள்

தொடர்பான மேல்நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2024–ஆம் ஆண்டு அக்டோபர் 29–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. A.P. சுகுமார்
எண்.66–ஏ, கே.என்.பி.ஏ.தெரு,
மேட்டுப்பட்டி, சின்னாளபட்டி,
ஆத்தூர் வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.

2) செயல் அலுவலர்,
சின்னாளபட்டி பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28

4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர்,
(Nodal Officer) (பெயரிியிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

29/10/24

சட்ட ஆலோசகர் / செயலாளர் (முகூபொ)

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032